[2002 மே 2

2. தகவல் கோரல்

(அ) கவன ஈர்ப்புகள், வினாக்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் அனுப்ப அரசுத் துறைகளுக்கு அறிவுறுத்தல்

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, Point of Order. மைக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 55-ன்படி பல கவன ஈர்ப்புகளை உறுப்பினர்கள் தங்களிடம் கொடுத்து, அவை அனுமதிக்கப்பட்டு துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல் பல்வேறு உறுப்பினர்கள் இப்போது விதி 45-ன்படி கேள்விகளை எல்லாம் கொடுத்து அவையும் துறைக்குச் சென்றிருக்கின்றன. கேள்விகளுக்கெல்லாம் 45 நாட்களிலே பதில் வர வேண்டும் என்பது விதி 45; 7 நாட்களுக்குள் துறையிலேயிருந்து பதில் வர வேண்டும் என்பது விதி 55-ல் இருக்கிறது. இந்த விதி 45, அதேபோல் விதி 55-ஐ நம்முடைய துறையினர் ஏனோ புறக்கணித்துவிட்டு, நிறைய பதில்கள் 55-ன்கீழ் வராமலேயே இருந்துகொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளைக்கும் இரண்டு கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறோம். அதிகபட்சம் எவ்வளவு எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு எடுத்துக்கொள்ளலாம்.

(ஆ) வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே சொல்லிவிட்டார். திரு. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நான்கு நாட்களாக வால்பாறை தோட்டத்திலே தொழிலாளர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சம்பந்தமாக பல கோரிக்கைகள் எல்லாம் கொடுத்திருக்கிறார். அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்துகிறார் 4 ஆம் தேதி பேச்சுவார்த்தை இருக்கிறது. (குறுக்கீடு) உட்காருங்கள்.